பதிலை வழங்கியிருக்கிறார்கள் என்றால் இந்தத் திட்டத்தில் ஏதேனும் சிக்கல் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே, இதைப்பார்த்து, தனிக் கேள்வி போட்டால், அதற்குரிய பதிலைத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்.

443—(*வினா எண் 21434) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

(இ) மைய அரசு இந்தப் பணிக்கு நிதியுதவி செய்கிறதா.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 447.00 கோடி ஆகும்.

(இ) மைய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

வையாவூர் மாம்பட்டு ஏரியில் பிரிவு அணை கட்டும் திட்டம்.

444—*வினா எண் 21723) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி வையாவூர் மாம்பட்டு ஏரியில் நீர் பகிர்ந்து கொடுக்க (Dividing Dam) கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இந்த ஏர் மதகிலிருந்து 320 அடி தூரத்தில் இரண்டு கண்கள் (Ventsh கொண்ட பிரிவு அணை (Dividing Dam) ஒன்று ஏற்கனவே உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, வையாவூர் ஏரியிலிருந்து ஊசிநத்தம், மாம்பட்டு, வையாவூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வருகிறது. அதிலே ஊசிநத்தத்திற்கு தனியாக டிவைடிங் டாம் கட்டி தண்ணீர் தரப்படுகிறது. தற்போது வையாவூர் விவசாயிகளின் நிலத்திற்கு மேல்மாம்பட்டு விவசாயிகளின் நிலம் இருப்பதால், அங்கே விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நீர் சரியாகக் கிடைப்பது இல்லை. ஆகவே, மாம்பட்டு விவசாயிகளுக்கு நீர் கிடைக்கும் வகையில், வையாவூர் ஏரியில் டிவைடிங் டாம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?